S.O - 2
VS - 3

ஏப்ரல் 2022-ஆம் மாதத்திற்கான சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay authorization for the month of April 2022)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009.

**கடித எண். 4585/பக5(1)/2023-2, நாள் 25.04.2023**

அனுப்புநர்

திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர் சென்னை-01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: பள்ளிக் கல்வி - 1990-1991 மற்றும் 2002-2003 முதல் 2006-2007, 2011-2012, 2014-2015 மற்றும் 2018-2019 ஆகிய கல்வி ஆண்டுகளில் தரம் உயர்த்தப்பட்ட அரசு/ நகராட்சி உயர் / மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட மொத்தம் 2760 தற்காலிகப் பணியிடங்களுக்கு ஏப்ரல் - 2023 ஆம் மாதத்திற்கு ஊதியக் கொடுப்பாணை (pay Authorization) வழங்குதல் - சார்பு.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண் 282, பள்ளிக் கல்வி (மேநிக-2) த் துறை, நாள் 03.11.2009.
2. அரசாணை (நிலை) எண்.120, பள்ளிக் கல்வி (மே.நி.க.2) த் துறை, நாள் 08.08.2011.
3. அரசாணை (நிலை) எண்.148, பள்ளிக் கல்வி (ப.க.2 (2)) த் துறை, நாள் 22.09.2014.
4. அரசாணை (நிலை) எண்.98, பள்ளிக் கல்வி (பக2(2) த் துறை, நாள் 14.05.2018.
5. அரசாணை (நிலை) எண்.111, பள்ளிக் கல்வி (பக2(2) த் துறை, நாள் 04.06.2018.
6. அரசாணை (நிலை) எண்.115, பள்ளிக் கல்வி (அகஇ (1) த் துறை, நாள் 07.06.2018.
7. அரசாணை (நிலை) எண்.165, பள்ளிக் கல்வி (பக2(2) த் துறை, நாள் 07.08.2018.

8. அரசாணை (நிலை) எண்.166, பள்ளிக் கல்வி (பக2(2))த் துறை, நாள்.07.08.2018.
9. அரசாணை (1டி) எண்.49, பள்ளிக் கல்வி (ப.க.5(1))த் துறை, நாள். 09.02.2019.
10. அரசாணை (1டி) எண்.354, பள்ளிக் கல்வித்(ப.க.5(1))த் துறை, நாள். 06.09.2019.
11. அரசாணை (1டி) எண்.82, பள்ளிக் கல்வி (ப.க.5(1))த் துறை, நாள். 07.03.2019.
12. அரசாணை (1டி) எண்.21, பள்ளிக் கல்வி (பக 5 (1))த் துறை, நாள் 10.01.2020.
13. அரசாணை (1டி) எண்.25, பள்ளிக் கல்வி (பக5(1))த் துறை, நாள் 21.01.2020.
14. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண். 00503/ எல்/இ3/2022, நாள் 06.04.2022.

**********

பார்வை 1-இல் காணும் அரசாணையின்படி 1990 – 1991 மற்றும் 2002-2003-ஆம் ஆண்டு முதல் 2006 -2007 ஆம் ஆண்டு வரை அரசு மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் 45 பள்ளிகளுக்கு 45 முதுகலை ஆசிரியர் (வணிகவியல்) மற்றும் 45 முதுகலை ஆசிரியர் (பொருளியல்) ஆக மொத்தம் 90 பணியிடங்கள் தோற்றுவித்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. பார்வை 2-இல் காணும் அரசாணையின்படி, 2011 – 2012 ஆம் கல்வியாண்டில் 100 அரசு / மாநகராட்சி/ நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தியும், நிலை உயர்த்தப்பட்ட ஒவ்வொரு பள்ளிக்கும் தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வரலாறு, பொருளியல், மற்றும் வணிகவியல் என 9 பாடங்களுக்கென 9 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 900 பணியிடங்கள் தோற்றுவித்தும் ஆணை வெளியிடப்பட்டது.

3. பார்வை 3-இல் காணும் அரசாணையின்படி 2014–2015 ஆம் கல்வியாண்டில் 100 அரசு / மாநகராட்சி/ நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தியும், 100 உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்கள் மேல்நிலைப் பள்ளி

தலைமையாசிரியர் பணியிடங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்ட 100 பள்ளிகளில் தமிழ், ஆங்கிலம், கணிதம், .இயற்பியல், வேதியியல், உயிரியல், வரலாறு, பொருளியல் மற்றும் வணிகவியல் என 9 பாடங்களுக்கென 9 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 900 பணியிடங்கள் தோற்றுவித்தும் ஆணை வெளியிடப்பட்டது.

4. பார்வை 4 முதல் 6 வரை உள்ள அரசாணைகளின்படி, 2018-2019 ஆம் கல்வியாண்டில் 5 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி ஆணையிடப்பட்டது. அவ்வாறு தரம் உயர்த்தப்பட்ட 5 மேல்நிலைப் பள்ளிகளுக்கு 5 உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்களை தரம் உயர்த்தி 5 மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்களாக தோற்றுவித்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், 5 மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்ட ஒவ்வொரு பள்ளிக்கும் 6 முதுகலை ஆசிரியர் பணியிடம் வீதம் 30 பணியிடங்களுக்கு உபரியாக உள்ள பணியிடங்களை பணிநிரவல் மூலம் நிரப்பிக் கொள்ளவும் ஆணையிடப்பட்டுள்ளது.

5. பார்வை 7-இல் காணும் அரசாணையில், 2018-2019 ஆம் கல்வி ஆண்டில் 95 ஊராட்சி ஒன்றிய / நகராட்சி/ மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டது மற்றும் 5 அரசு உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து 5 அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் தோற்றுவித்தும், அவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடம் ஒன்று வீதம் 100 உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடம் அனுமதித்தும் ஆணை வெளியிடப்பட்டது.

6. பார்வை 8 இல் காணும் அரசாணையின்படி, 2018-2019 ஆம் கல்வியாண்டில் 95 அரசு /நகராட்சி/ மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியும், அவ்வாறு தரம் உயர்த்தப்பட்ட 95 மேல்நிலைப் பள்ளிகளுக்கு 95 உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்களை மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களாக தரம் உயர்த்தியும் மற்றும் 95 மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஒவ்வொரு பள்ளிக்கும் 6 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் (95x6=570) 570 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவித்தும் ஆணை வெளியிடப்பட்டது.

7. பார்வை 9 முதல் 13 வரை உள்ள அரசாணைகளின்படி, 200 மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்கள், 100 உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 2460 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் ஆக மொத்தம் 2760 தற்காலிகப் பணியிடங்களுக்கு 31.12.2021 வரை தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

8. பார்வை ஒன்று முதல் எட்டு வரை உள்ள அரசாணைகளின்படி ஒப்பளிப்பு செய்யப்பட்ட 2760 தற்காலிகப் பணியிடங்களுக்கு வழங்கப்பட்ட தொடர் நீட்டிப்பு 31.12.2021 அன்று உடன் முடிவடைந்த நிலையில், இப்பணியிடங்களுக்கு 01.01.2022 முதல் 31.12.2022 வரை ஓராண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்க பள்ளிக் கல்வி ஆணையர் அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார். மேலும், தற்பொழுது இப்பணியிடங்களுக்கு ஏப்ரல்-2023 ஆம் மாதத்திற்கு ஊதியம் பெறத்தக்க வகையில் ஊதியம் வழங்க ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

9. மேற்குறிப்பிட்டுள்ள தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2022 முதல் 31.12.2022 வரை ஓராண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில், பார்வை ஒன்று முதல் எட்டு வரை உள்ள அரசாணைகளின்படி ஒப்பளிப்பு செய்யப்பட்ட 2760 தற்காலிகப் பணியிடங்களுக்கு ஏப்ரல்-2023 ஆம் மாதத்திற்கான ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான ஏப்ரல்-2023 ஆம் மாதத்திற்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

10. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.எண். 13659/கல்வி-II/ 2023, நாள் 24.04.2023 இல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

க. சுப்பையா

(அரசு சார்புச் செயலாளர்)
அரசு முதன்மைச் செயலாளருக்காக.

நகல்:

பள்ளிக்கல்வி ஆணையர், சென்னை-6
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.
நிதி(கல்வி-II)துறை, சென்னை-9.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்: - இணை இயக்குநர் ந.க. எண்: 000503/என்.எஸ்.எஸ்/இ3/22 நாள்: 28.04.23

தகவலுக்காகவும் தக்க நடவடிக்கையின் பொருட்டும் அனுப்பி முதன்மைக் கல்வி அலுவலர்கள் அனுப்பப்படுகிறது.

Joint Director (NSS),
Commissionerate of School Education,
Chennai-600 006.

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்,